# தண்டனை அளிக்கப்படாத கைதி மருத்துவமனைக்கு மாற்றப்படுதல் (கட்டுப்பாடுகளுடன் அல்லது அவை இல்லாமல்)

(மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 48)

| | |
|---|---|
| 1. நோயாளியின் பெயர் | |
| 2. உங்கள் பராமரிப்பிற்கு பொறுப்பேற்றுள்ள நபரின் பெயர் (உங்களுக்கு "பொறுப்பாக உள்ள மருத்துவர்") | |
| 3. மருத்துவமனை மற்றும் வார்டின் பெயர் | |
| 4. நீங்கள் மாற்றப்படுவதற்கான உத்தரவின் தேதி | |
| 5. கட்டுப்பாட்டு உத்தரவு சரியாக உள்ளதா? | ஆம்/இல்லை |

## நான் ஏன் மருத்துவமனையில் இருக்கிறேன்?

நீங்கள் இந்த மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருக்கிறீர்கள் ஏனென்றால், உங்களுக்கு மனநல குறைபாடு இருப்பதாகவும், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக நீங்கள் ஒரு மருத்துவமனையில் இருக்க வேண்டியது அவசியம் என்றும் இரண்டு மருத்துவர்கள் நீதித்துறை மாகாண செயலருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

தண்டனையளிக்கப்படாத கைதி மருத்துவமனைக்கு மாற்றப்படுவதை அனுமதிக்கும் மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 48ன் கீழ் "மாற்றத்திற்கான உத்தரவு" ஒன்றை நீதித்துறை மாகாண செயலர் பிறப்பித்துள்ளார்.

மன நலச் சட்டத்தின் பிரிவு 49ன் கீழ் கட்டுப்பாட்டு உத்தரவு ஒன்றையும் உங்களுக்கு நீதித்துறை மாகாண செயலர் அளித்திருக்கலாம்.

## கட்டுப்பாட்டு உத்தரவு என்றால் என்ன?

உங்களுக்கு கட்டுப்பாட்டு உத்தரவு அளிக்கப்பட்டிருப்பது என்பது, நீங்கள் வெளியேறலாம் என்று நீதித்துறை மாகாண செயலர் கூறினாலன்றி, உங்களை மருத்துவமனையிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்க முடியாது என்பதைக் குறிக்கிறது. இத்தகைய நிகழ்வில், சில விதிமுறைகளுக்கு உட்படும் பட்சத்தில்தான் நீங்கள் வெளியே அனுப்பப்படுவது முடிவுசெய்யப்படும், மற்றும் இவை அந்நேரம் நெருங்கிவரும்போது உங்களுக்கு விளக்கிக் கூறப்படும். நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போது, உங்கள் பராமரிப்பிற்கு பொறுப்பேற்றுள்ள நபர் (உங்களுக்கு பொறுப்பாக உள்ள மருத்துவர்) நீங்கள் தற்காலிகமாக வெளியேறும் முன்னரோ அல்லது வேறு ஒரு மருத்துவமனைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னரோ, நீதித்துறை மாகாண செயலரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

## நான் இங்கு எவ்வளவு காலம் இருப்பேன்?

உங்கள் மாற்றத்திற்கான உத்தரவு முடியும் வரை நீங்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருப்பீர்கள்.

**நடுவர் நீதிமன்றத்தால் சிறையில் அடைக்கப்பட்டபின்** நீங்கள் இங்கே மாற்றப்பட்டிருந்தால்:

விசாரணைக்காக நீங்கள் கிரவுன் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டாலன்றி, அல்லது நடுவர் நீதிமன்றத்தால் மீண்டும் சிறைத் தண்டனை பெற்றாலன்றி (இந்நிலையில் நீங்கள் மருத்துவமனையிலேயே இருப்பீர்கள்) உங்கள் சிறைத் தண்டனை காலம் முடியும்வரை நீங்கள் மருத்துவமனையில் வைக்கப்படுவீர்கள். மனநல குறைபாட்டிற்காக உங்களுக்கு இனிமேலும் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று உங்களுக்காக பொறுப்பேற்றுள்ள மருத்துவர் கூறினால், மாற்றத்திற்கான உத்தரவை முடிக்கும்படியும் நடுவர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாம். அந்நிலையில், ஜாமீனில் உங்களை விடுதலை செய்வதற்கு நீதிமன்றம் முடிவு செய்தாலன்றி, நீங்கள் மீண்டும் சிறைச்சாலைக்கு திரும்பிவிடுவீர்கள்.

**ஒரு பொதுவியல் கைதியாக அல்லது குடிவரவு சட்டங்களின் கீழ்** நீங்கள் இங்கு மாற்றப்பட்டிருந்தால்:

உங்களுக்கு இனிமேலும் சிகிச்சை தேவையில்லை என்று உங்களுக்காக பொறுப்பேற்றிருக்கும் மருத்துவர் கூறினாலன்றி, நீங்கள் சிறையிலிருந்து விடுதலையாகும் நாள், அல்லது காவல் மையத்திலிருந்து அனுப்பப்படும் நாள் வரை மருத்துவமனையிலேயே வைக்கப்படுவீர்கள். உங்களுக்கு கட்டுப்படுத்தும் உத்தரவு அளிக்கப்பட்டிருந்தால் மற்றும் உங்களுக்காக பொறுப்பேற்றிருக்கும் மருத்துவர் உங்களுக்கு இனிமேலும் சிகிச்சை தேவையில்லை என்று கூறினால், நீங்கள் சிறைச்சாலைக்கோ அல்லது காவல் மையத்திற்கோ திரும்ப அனுப்பப்படுவீர்கள்.

**மற்ற சமயங்களில்:**

உங்களுக்காக பொறுப்பேற்றிருக்கும் மருத்துவர் உங்களுக்கு இனிமேலும் சிகிச்சை தேவையில்லை என்று கூறும்வரை அல்லது உங்கள் வழக்கு நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படும்வரை நீங்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருப்பீர்கள். உங்களுக்காக பொறுப்பேற்றிருக்கும் மருத்துவர் உங்களுக்கு இனிமேலும் சிகிச்சை தேவையில்லை என்று கூறினால், ஜாமீனில் உங்களை விடுதலை செய்வதற்கு நீதிமன்றம் முடிவு செய்தாலன்றி, நீங்கள் மீண்டும் சிறைச்சாலைக்கு திருப்பி அனுப்பப்படுவீர்கள்.

## மாற்றப்படுவதற்கான உத்தரவு முடிந்தபின் என்னை மருத்துவமனையில் வைத்திருக்க முடியுமா?

உங்கள் மாற்றத்திற்கான உத்தரவு முடிந்த பின்னும், உங்களுக்கு மேலும் சிகிச்சை தேவைப்பட்டால், மன நலச் சட்டத்தின் வேறொரு பிரிவின் கீழ் உங்களை மருத்துவமனையில் வைத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. அவ்வாறு நடந்தால். இதனை விளக்குவதற்கான இன்னொரு சிற்றேடு உங்களுக்கு அளிக்கப்படும்.

## நான் நீதிமன்றத்திற்கு திரும்பச் செல்ல வேண்டுமென்றால் என்ன நடக்கும்?

நீங்கள் காவலில் வைக்கப்பட்டு, இன்னும் விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் இருந்தால், நீங்கள் திரும்பவும் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும். உங்கள் வழக்கை நீதிமன்றம் ஆய்வு செய்வதுடன், நீங்கள் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டும் என்று குறிப்பிடும் மன நலச் சட்டப் பிரிவு 37ன் கீழ் மருததுவமனை உத்தரவு ஒன்றையும் பிறப்பிக்கக்கூடும் அல்லது உங்களுக்கு ஒரு மாற்று தண்டனையை அளிக்கக்கூடும். உங்களுக்கு மனநலக் குறைபாடு உள்ளது மற்றும் நீங்கள்

மன நலச் சட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று இரண்டு மருத்துவர்கள் கூறினால்தான், நீதிமன்றத்தால் ஒரு மருத்துவமனை உத்தரவை பிறப்பிக்க முடியும்.

## என்னால் மேல் முறையீடு செய்ய முடியுமா?

உங்களை மருத்துவமனைக்கு மாற்றுவது குறித்த நீதித்துறை மாகாண செயலரின் முடிவுக்கு எதிராகவோ அல்லது நடுவர் நீதிமன்றத்தின் காவலுக்கு எதிராகவோ உங்களால் மேல்முறையீடு செய்ய முடியாது.

உங்களை மருத்துவமனையிலிருந்து வெளியேற அனுமதிக்கும்படி நீங்கள் கேட்கக்கூடிய நபர்கள் உள்ளனர்.

உங்களுக்கு கட்டுப்பாட்டு உத்தரவு அளிக்கப்படவில்லை என்றால், உங்களை மருத்துவமனையிலிருந்து வெளியேற அனுமதிக்கும்படி நீங்கள் மருத்துவ மேலாளர்களை கேட்டுக் கொள்ளலாம். இதை நீங்கள் எந்த நேரத்திலும் செய்யலாம். இந்த மருத்துவமனை மேலாளர்கள், மருத்துவமனையில் குறிப்பிட்ட நபர்கள் வைக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்வதற்காக மருத்துவமனைக்குள் அமைக்கப்பட்ட சில நபர்கள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவைச் சேர்ந்தவர்கள். உங்களை மருத்துவமனையிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கலாமா என்பதை முடிவு செய்வதற்குமுன் மருத்துவமனை மேலாளர்கள உங்களிடம் பேச விரும்பலாம். இதை நீங்கள் செய்ய விரும்பினால், அவர்களுக்கு பின்வரும் முகவரிக்கு நீங்கள் எழுதலாம்:

| |
|---|
| |

அல்லது மருத்துவமனை மேலாளர்களைத் தொடர்பு கொள்ள உங்களுக்கு உதவும்படி பணியாளர் ஒருவரை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

உங்களுக்கு கட்டுப்பாட்டு உத்தரவு அளிக்கப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், நீங்கள் மருத்துவமனையில் வைக்கப்படக்கூடாது என்று கூறும்படி ஒரு தீர்ப்பாயத்தை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

## தீர்ப்பாயம் என்றால் என்ன மற்றும் என்ன நடக்கும்?

தீர்ப்பாயம் என்பது, உங்களை மருத்துவமனையிலிருந்து வெளியேற அனுமதிக்கலாமா என்பதை முடிவு செய்யக்கூடிய ஒரு தனிக் குழுவாகும். அது உங்களுடனும், நீங்கள் அறிந்துள்ள மருத்துவமனை பணியாளர்களுடனும் ஒரு சந்திப்பை மேற்கொள்ளும். இந்த சந்திப்பு "விசாரணை" என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உதவுவதற்காக உங்களுடன் வரும்படி யாரையேனும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். விசாரணைக்குமுன், தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் உங்களைப் பற்றியும் உங்களுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு பற்றியும் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளைப் படிப்பார்கள். தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களில் ஒருவர் உங்களிடம் பேசுவதற்காக வருவார்.

## நான் எப்போது தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கலாம்?

உங்களுக்கு மாற்றப்படுவதற்கான உத்தரவு அளிக்கப்பட்டபின், முதல் ஆறு மாதங்களில் ஒருமுறை எந்த நேரத்திலும் நீங்கள் தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

அதற்குப்பின் அடுத்த ஆறு மாதங்களில் ஒருமுறை எந்த நேரத்திலும், மற்றும் அதற்குப் பிறகு நீங்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒருமுறையும் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

உங்களுக்கு கட்டுப்பாட்டு உத்தரவு அளிக்கப்படவில்லையெனில், இரண்டாவது ஆறு மாதங்களில் ஒருமுறை மற்றும் அதற்குப்பின் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒருமுறை உங்கள் நெருங்கிய

உறவினர்கூட தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பிக்கலாம். உங்களுடைய மிக நெருங்கிய உறவினர் யார் என்பதையும் இச்சிற்றேடு மேலும் விளக்குகிறது.

நீங்கள் தீர்ப்பாயத்திற்கு மனு செய்ய விரும்பினால், பினவரும் முகவரிக்கு எழுதலாம்:

தி ட்ரிப்யூனல்ஸ் சர்வீஸ்
பிஓ பாக்ஸ் 8793
5வது ∴ப்ளோர்
லீசெஸ்டர்
LE1 8BN தொ.பே. 0300 123 2201

உங்கள் சார்பாக தீர்ப்பாயத்திற்கு எழுதவும், விசாரணையின்போது உங்களுக்கு உதவவும் ஒரு வழக்கறிஞரை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.
இதில் சிறந்து விளங்கும் வழககறிஞர்களின் பட்டியல் ஒன்றை மருத்துவமனையும் சட்ட சங்கமும் வைத்துள்ளன. இதற்காக வழக்கறிஞர் அளிக்கும் உதவிக்காக நீங்கள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சட்ட உதவித் திட்டத்தின் கீழ் இச்சேவை இலவசமாக வழங்கப்படுகிறது.

## நான் மருத்துவமனையில் வைக்கப்படக்கூடாது என்று தீர்ப்பாயம் கூறினால் என்ன நடக்கும்?

நீங்கள் மருத்துவமனையில் வைக்கப்படக்கூடாது என்று தீர்ப்பாயம் கூறுமானால், நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும் என்று தீர்ப்பாயம் பரிந்துரைத்தாலன்றி, நீங்கள் சிறைச்சாலைக்கோ அல்லது காவல் மையத்திற்கோ திரும்ப கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதையே அது குறிக்கிறது.

## எனக்கு என்ன சிகிச்சை அளிக்கப்படும்?

உங்களுக்கு பொறுப்பேற்றுள்ள மருத்துவர் மற்றும் இதர பணியாளர்கள், உங்கள் மனநல குறைபாட்டிற்குத் தேவைப்படும் எந்வொரு சிகிச்சை பற்றியும் உங்களுடன் பேசுவார்கள். பெரும்பாலான நேரங்களில், அவர்களுடைய அறிவுரைகளை நீங்கள் கேட்க வேண்டியிருக்கும்.

மூன்று மாதங்களுக்குப்பின், உங்கள் மனநல குறைபாட்டிற்காக உங்களுக்கு அளிக்கப்படும் எந்தவொரு மருந்துகள் குறித்தும் சிறப்பு விதிகள் உள்ளன. நீங்கள் மருந்துகளை விரும்பவில்லை என்றாலோ, அல்லது அவற்றை நீங்கள் விரும்புகிறீர்களா என்பதைக் கூறமுடியாத அளவுக்கு நீங்கள் உடல் நலிவுற்றிருந்தாலோ, இந்த மருத்துமனையைச் சேராத ஒரு மருத்துவர் உங்களை வந்து பார்ப்பார். இந்தத் தனி மருத்துவர், உங்களிடமும், மருத்துவமனையில் உங்களை அறிந்த பணியாளர்களிடமும் பேசுவார். இந்தத் தனி மருத்துவர் உங்களுக்கு என்ன மருந்துகள் அளிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்வார். அது ஓர் அவசரநிலையாக இல்லாதபட்சத்தில், உங்கள் ஒப்புதலின்றி அளிக்கப்படக்கூடிய மருந்துகள் இவை மட்டுமேயாகும்.

இந்தத் தனி மருத்துவர் SOAD (இரண்டாவது கருத்திற்காக அமர்த்தப்பட்ட மருத்துவர்) என்று அழைக்கப்படுவார் மற்றும் அவர் மன நலச் சட்டம் எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்கும் ஒரு தனிப்பட்ட குழுவினால் அமர்த்தப்பட்டவராவார்.

எலக்ட்ரோ-கன்வல்ஸிவ் தெரபி (ECT) போன்ற சில சிறப்பு சிகிச்சைகளுக்கு பல்வேறு விதமான விதிகள் உள்ளன. இந்த சிறப்பு சிகிச்சைகளில் ஒன்று உங்களுக்குத் தேவைப்படும் என்று பணியாளர்கள் கருதினால், அதன் விதிகள் உங்களுக்கு விளக்கிக் கூறப்படுவதுடன், இன்னொரு சிற்றேடும் உங்களுக்கு அளிக்கப்படும்.

## உங்கள் நெருங்கிய உறவினருக்குத் தெரிவித்தல்

உங்களுக்கு கட்டுப்பாட்டு உத்தரவு அளிக்கப்பட்டிராவிட்டால். உங்கள் நெருங்கிய உறவினர் என்று மன நலச் சட்டம் குறிப்பிடும் நபருக்கு இச்சிற்றேட்டின் பிரதி ஒன்று அளிக்கப்படும்.

உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்படும் நபர்களின் பட்டியல் ஒன்று மன நலச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது. பொதுவாக, அந்தப் பட்டியலில் மிக உயர்ந்த இடத்திலுள்ள நபரே உங்கள் மிக நெருங்கிய உறவினராகக் கருதப்படுவார். இதனையும், உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக உங்கனள் நெருங்கிய உறவினருக்கு என்ன உரிமைகள் உள்ளன என்பதையும் விளக்கும் சிற்றேடு ஒன்றை மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு அளிக்க முடியும்.

உங்கள் விஷயத்தில், எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள உங்கள் நெருங்கிய உறவினர்:

| |
|---|
| |

இந்நபர் சிற்றேட்டின் பிரதி ஒன்றைப் பெறுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், தயவுசெய்து உங்கள் செவிலியர் அல்லது வேறொரு பணியாளரிடம் கூறவும்.

## உங்கள் நெருங்கிய உறவினரை மாற்றிக் கொள்ளுதல்

உங்கள் நெருங்கிய உறவினராக இருப்பதற்கு இக்குறிப்பிட்ட நபர் பொருத்தமானவராக இல்லை என்று நீங்கள் நினைத்தால், அவருக்கு பதிலாக வேறொருவர் உங்கள் நெருங்கிய உறவினராகக் கருதப்பட வேண்டும் என்று கேட்டு நீங்கள் கவுன்டி நீதிமன்றத்திற்கு மனு செய்யலாம். இதனை விளக்கும் சிற்றேடு ஒன்றை மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு அளிக்க முடியும்.

## உங்கள் கடிதங்கள்

உங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் அனைத்தும் உங்களிடம் கொடுக்கப்படும். உங்களிடமிருந்து தாங்கள் கடிதம் எதுவும் பெற விரும்பவில்லை என்று கூறும் நபர்களைத் தவிர மற்றவர்கள் எவருக்கும் நீங்கள் கடிதங்களை அனுப்பலாம். இந்நபர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மருத்துவமனை பணியாளர்களால் தடுத்து நிறுத்தப்படக்கூடும்.

## நடைமுறைக்கான நெறி

மன நலச் சட்டம் பற்றியும், மனநல குறைபாடுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் பற்றியும் மருத்துவமனையில் உள்ள பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் நடைமுறைக்கான நெறி ஒன்று உள்ளது. உங்கள் பராமரிப்பு குறித்த முடிவுகளை எடுக்கும்போது, இந்நெறி என்ன சொல்கிறது என்பதை பணியாளர் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால், இந்நெறியின் பிரதி ஒன்றை பார்ப்பதற்காக கேட்டுப் பெறலாம்.

## நான் எவ்வாறு புகார் அளிக்க வேண்டும்?

மருத்துவமனையில் உங்களுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக எதைப் பற்றியேனும் நீங்கள் புகார் அளிக்க விரும்பினால், தயவுசெய்து பணியாளர் ஒருவரிடம் பேசவும். அவர்கள் பிரச்னையைத் தீர்க்க உதவக்கூடும். மருத்துவமனையின் புகார் அளிக்கும் நடைமுறை குறித்தும் அவர்கள் விவரம் அளிக்கக்கூடும், உள் தீர்வு என்றழைக்கப்படும் நடைமுறையின் மூலம் உங்கள் புகாருக்கான தீர்வைப் பெறுவதற்கு அதனை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் புகார் அளிப்பதற்கு உதவக்கூடிய யாரேனும் மற்ற நபர்கள் பற்றியும் அவர்களால் உங்களுக்குக் கூறமுடியும்.

மருத்துவமனையின் புகார் நடைமுறைகள் உங்களுக்கு உதவக்கூடும் என்று நீங்கள் கருதாவிட்டால், நீங்கள் ஒரு தனி கமிஷனிடம் முறையிடலாம். இந்தக் கமிஷன், மன நலச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையும், அது சரியான முறையில் அமல்படுத்தப்படுகிறதா மற்றும் மருத்துவமனையில் இருக்கும் காலத்தில் நோயாளிகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறார்களா

என்பதையும் கண்காணிக்கிறது. இக்கமிஷனை எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை விளக்கும் ஒரு சிற்றேட்டை மருத்துவமனை பணியாளர்கள் உங்களுக்கு அளிப்பார்கள்.

### மேற்கொண்டு உதவி மற்றும் தகவல்

உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை குறித்து நீங்கள் புரிந்து கொள்ளாதவை ஏதேனும் இருப்பின், பணியாளர்களில் ஒருவர் உங்களுக்கு உதவும் முயற்சியை மேற்கொள்வார். நீங்கள் புரிந்துகொள்ளாத ஏதேனும் ஒன்று இந்த சிற்றேட்டில் இருந்தாலோ அல்லது இந்த சிற்றேடு விடை தராத மற்ற ஏதேனும் கேள்விகள் உங்களுக்கு இருந்தாலோ, தயவுசெய்து பணியாளர் ஒருவரைக் கேட்டு விளக்கம் பெறவும்.

யாருக்காவது கொடுப்பதற்காக இச்சிற்றேட்டின் இன்னொரு பிரதி உங்களுக்கு தேவைப்பட்டால், தயவுசெய்து கேட்கவும்.